செ.வெ.எண்: 13 நாள்: 05.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.366.29 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வாண்டாக்கோட்டை ஊராட்சி, திருவுடையாப்பட்டியில் வெள்ளாற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.360.89 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப்பாலம் கட்டுமானப் பணியையும், பாலையூர் ஊராட்சி, கலிங்கிப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.5.28 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும், பூவரசக்குடி ஊராட்சி, பூவரசக்குடியில் தனிநபர் இல்லக்கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கழிவறை கட்டுமானப்பணியையும் என மொத்தம் ரூ.366.29 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது ஆற்றின் இருபுறமும் தடுப்புக்கட்டைகளை அதிக உறுதியுடன் கட்டுவதுடன் மழைநீர் செல்லும் வகையில் தரைப்பரப்பினை சமதளப்படுத்தி சீரமைக்கவும், கிராமங்களிலுள்ள சீமைக்கருவேலமரங்களை முழுவதுமாக அகற்றவும், தனிநபர் இல்லக்கழிவறைகளை தினமும் உரிய முறையில் பயன்படுத்தவும், நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்ப்பதுடன் இந்த மரக்கன்றுகளை ஊராட்சிகளில் சிறந்த முறையில் நட்டு வளர்க்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வல்லத்திராக்கோட்டை ராமசாமி தெய்வானையம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளி, கலிங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித்திறனை ஆய்வு செய்தார். மேலும் ராமசாமி தெய்வானையம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளி சத்துணவுக்கூடத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவினை சாப்பிட்டு ஆய்வு செய்ததுடன் சிறப்பான முறையில் உணவினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும், மாணவர்களுக்கு தயாரித்து வழங்க பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நாகராஜன், திரு.ரவிச்சந்திரன், உதவி பொறியாளர்கள் திரு.அருண்பிரசாத், திரு.சுரேஷ், திருமதி.அபிநயா, ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திரு.சிவக்குமார், திருமதி.முத்துலெட்சுமி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**